# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2060/12 - 2018 පෙබරවාරි මස 27 වැනි අඟහරුවාදා - 2018.02.27

*2060/12 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 27 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்*

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு குண்டசாலை- ஹாரகம நீர் வழங்கல் கருத்திட்டத்தின் கீழ் சுத்திகரிப்பு நீர் குழாய் வழியினை பதிப்பதற்காக முன்மொழியப்பட்டுள்ள உட்பிரவேச பாதையின் வழியுரிமையினை சுவீகரித்துக்கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக் கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,<br>
நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்<br>
அமைச்சர்.

நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,<br>
இல. 35, "லக்திய மெதுர", புதிய பாராளுமன்ற வீதி,<br>
பெலவத்தை,<br>
பத்தரமுல்லை,<br>
2018, பெப்புருவரி 21,<br>
5/2/1/1347.

#### அட்டவணை

கண்டி மாவட்டத்தின், கண்டி கங்கவடக் கோரளை பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 250, பிடகன்த கிராம அலுவலர் பிரிவில், பிடகன்த கிராமத்தில் (காணியின் பெயர் தெரியாது) அமைந்துள்ள (இணைக்கப்பட்டுள்ள) திட்டவரைபடத்தின் துண்டு இலக்கம் 01 இன் முழு விஸ்தீரணத்தில் இருந்து அண்ணளவாக 2.5 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தைக் கொண்ட பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.

வடக்கு : திரு. நாணாயக்கார அவர்கள் உரிமைகோருகின்ற பிறிதொரு காணிப்பகுதி (கல்வி நிறுவனம் அமைந்துள்ள காணி) ;

கிழக்கு : பழைய மாத்தளை வீதி ;

தெற்கு : திரு. நாணாயக்கார அவர்கள் உரிமை கோருகின்ற காணிப்பகுதி மற்றும் திருமதி வயலட் குணரத்தின உரிமைகோருகின்ற காணிப்பகுதி ;

மேற்கு : திருமதி வயலட் குணரத்தின உரிமைகோருகின்ற காணிப்பகுதி ;

*காணிக்கு உரிமைகோருபவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் :*

1. வணக்கத்துக்குரிய வெடறுவே உபாலி குணரத்தின தேரர்,
   விகாரை அதிபதி, அஸ்கிரி கெடிகே ரஜமஹா விகாரை,
   அஸ்கிரிய- கண்டி.

2. திருமதி வயலட் குணரத்தின,
   டீ. சியபலாகஸ்தென்ன வீதி,
   கண்டி.

3. திரு. நாணாயக்கார,
   இல. : 21/5, மெத்சிரிபாய,
   கடுகஸ்தோட்டை மற்றும் பலர்.

3- 601

---

## 1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு தெஹிவளை - கல்கிஸை கழிவுநீர் அகற்றும் கருத்திட்டத்தின் கீழ் 10 ஆம் இலக்க நீர் இறைக்கும் இயந்திரசாலையை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதி ஒன்றினை சுவீகரித்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக் கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.*

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்
அமைச்சர்.

நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
இல. 35, "லக்திய மெதுர", புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2018, பெப்புருவரி 16.
5/2/2/1325.

**அட்டவணை**

கொழும்பு மாவட்டத்தின், தெஹிவளை பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 538 சீ சரணங்கர கிராம அலுவலர் பிரிவில், சரணங்கர வீதியில் அமைந்துள்ள இலக்கம் 28/10 உடைய அண்ணளவாக 06 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தைக் கொண்ட பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.

வடக்கு : நீரோடைக் காப்புச்சுவர் ;

கிழக்கு : இலக்கம் 6 A வியாபார நிலையம் ;

தெற்கு : ஸ்ரீ சரணங்கர வீதி ;

மேற்கு : இக்காணியின் மிகுதிப் பகுதி.

*காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி : கண்டறிய முடியவில்லை.*

3- 602

---

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.